# உங்களுடைய பிள்ளை குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாரா?

இந்தப்பக்கங்களில், பிள்ளையைக் குறிப்பது 18 வயதுக்குட்பட்ட ஒருவரை.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒரு பிள்ளை குற்றவியல் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற வழக்கறிஞர் ஒருவரின் ஆலோசனையைப் பெறவேண்டும். அந்த வழக்கறிஞர் இளைஞர் குற்றவியல் சட்டத்தில் அனுபவம் உள்ளவராக இருப்பது மிகவும் நல்லது. உங்களுக்கு உங்கள் பிள்ளைக்கு வழக்கறிஞர் ஒருவரை அமர்த்த பணவசதி இல்லாவிடில் ஒன்ராறியோ சட்ட உதவி நிறுவனம் (Legal Aid Ontario) அவருக்கு பணம் செலுத்தக் கூடும்.

உங்கள் பிள்ளை குற்றம் செய்யாதிருந்தாலும் அல்லது அது ஒரு கடுமையான சம்பவம் இல்லை என்று பிள்ளை உங்களுக்கு சொன்னாலும் கூட ஒரு வழக்கறிஞரை நீங்கள் அமர்த்த வேண்டும். ஏனெனில் அடுத்தபடியாக நடப்பது கடுமையாக இருக்கலாம்.

உங்கள் பிள்ளை கைதுசெய்யப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டு, அல்லது நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டி இருந்தால் அதைப்பற்றி உங்களுக்கு அறிவிப்பது காவல்படையினரின் கடமையாகும். உங்களுடைய பிள்ளையின் வழக்கைப்பற்றி தெரிந்திருப்பதும் மற்றும் ஈடுபாடு கொண்டிருப்பதும் நல்லதொரு யோசனையாகும். இயலுமானால், உங்களுடைய பிள்ளையோடு காவல் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் நீங்கள் செல்லுங்கள்.

## என்னுடைய பிள்ளை நீதிமன்றத்திற்கு போக வேண்டுமா?

உங்களுடைய பிள்ளை குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தால், சாதரணமாக அவர் குற்றவியல் நீதிமன்றத்திற்கு குறைந்தது ஒரு தடவையாவது போக வேண்டி வரும். அதன் பின், நீதிமன்றத்திற்கு போகாமல் இந்த வழக்கை கையாள வழிவகைகள் இருக்கலாம்.

நீதிமன்றம் உங்கள் பிள்ளையை தண்டிக்க முடிவுசெய்தால், அந்த தண்டனை சிறைவாசமாக இல்லாமல் இருக்கலாம். வேறு என்ன செய்ய முடியும் என்பதை அறிய உங்கள் பிள்ளை அவருடைய வழக்கறிஞருடன் பேசவேண்டும்.

வயது வந்தவர்களை விட குற்றஞ்சாட்டப்பட்ட பிள்ளைகளுக்கு சட்டம் கடினக் குறைவாக இருக்கும். ஆயினும் மிகவும் பாரதூரமான குற்றங்களுக்கு, வயது வந்தவர்களைப் போல பிள்ளைகளும் அதே தண்டனையை பெறலாம்.

## என் பிள்ளையின் வழக்கறிஞரிடம் இருந்து நான் எதை எதிர்பார்க்க முடியும்?

நீங்கள் பணம் செலுத்தினாலும், வழக்கறிஞர் உங்களுடைய பிள்ளைக்காகவே வேலை செய்கிறார். எனவே வழக்கறிஞர் உங்கள் பிள்ளையுடன் பேசி உங்கள் பிள்ளையோடு சேர்ந்து முடிவுகளை எடுப்பார்.

வழக்கு எப்படி செல்கிறது என அறிவிக்கும்படி நீங்கள் வழக்கறிஞரை கேட்கலாம். நீங்கள் கேள்விகளையும் கேட்கலாம். ஆயினும் தகவல்களை வழக்கறிஞர் உங்களுடன் பரிமாறலாம் என்று உங்கள் பிள்ளை சொன்னால் அன்றி, வழக்கறிஞரால் தகவலை உங்களுடன் பரிமாற முடியாது.

## என்னுடைய பிள்ளை தொடர்ந்து பாடசாலைக்குப் போகமுடியுமா?

சாதாரணமாக, குற்றவியல் காரியங்களுடன் சம்பந்தப்பட்ட ஒரு பிள்ளை பாடசாலைக்குப் போவதற்குரிய உரிமை உண்டு. சிலவேளைகளில் வழக்கு முடிவடையும்வரை அந்தப் பிள்ளை ஒரு குறிப்பிட்ட பாடசாலைக்குப் போகமுடியாது என நீதிமன்றம் சொல்லலாம். இப்படி நடந்தால் உங்களுடைய பிள்ளையை நீங்கள் வேறு ஒரு பாடசாலைக்கு அனுப்பலாம்.

சில சந்தர்ப்பங்களில், பாடசாலையில் நிகழாத சம்பவத்திற்காகவும் கூட உங்களுடைய பிள்ளையை பாடசாலை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் அல்லது வெளியேற்றலாம். உங்களுடைய பிள்ளையை பாடசாலையில் படிக்கவைக்க முயற்சிப்பதற்கு சில நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கலாம். இதைப்பற்றி கண்டறிய சில சமூக முகவர்கள் நிறுவனங்களும் சட்ட உதவி நிறுவனங்க் உங்களுக்கு உதவலாம்.

## எதிர்காலத்தில் இந்த குற்றச்சாட்டுகள் என்னுடைய பிள்ளைக்கு ஒரு பிரச்சனையாக இருக்குமா?

உங்களுடைய பிள்ளை குற்றஞ்சாட்டப்படும்போது, காவல் துறையும் நீதிமன்றமும் "குறிப்பேடுகள்" என்று சொல்லப்படுகின்ற கோப்புகளில் வைத்து இவற்றை கண்காணிக்கலாம்.

➥2வது பக்கத்தில் இன்னும் உள்ளது➥

இந்த காவல் துறை மற்றும் நீதிமன்ற குறிப்பேடுகள் உங்கள் பிள்ளைக்கு நீண்ட காலத்திற்கு பிரச்சனைகளை உண்டாக்கலாம். 18 வயதானதும், உங்கள் பிள்ளை வயதுவந்த ஒருவராக கருதப்படுவார். ஆயினும் அதற்கு முன்பாக உள்ள உங்கள் பிள்ளையின் குறிப்பேடுகளை இன்னமும் பிறர் பார்க்க முடியும்.

உதாரணமாக, ஒரு வேலை எடுப்பதை அல்லது பிற நாடுகளுக்கு பிரயாணம் செய்வதை, உங்கள் பிள்ளையின் குறிப்பேடுகள் கடினமாக்கலாம். உங்கள் பிள்ளையின் குடிவரவு நிலைமைகளை குறிப்பேடுகள் பாதிக்கவும் கூடும். சில வேளைகளில், உங்களுடைய பிள்ளையின் குறிப்பேடுகள் உங்களுடைய குடும்பத்தின் குடிவரவு நிலைமைகளையும் கூட பாதிக்கலாம்.

## என்னுடைய பிள்ளை செய்த காரியத்தால் ஏற்பட்ட செலவை செலுத்த வேண்டும் என்று என்னைக் கேட்டால் நான் என்ன செய்வது?

உங்களுடைய பிள்ளை 18 வயதுக்குட்பட்டவராக இருந்து, இன்னொருவருக்கு சொந்தமான பொருட்களை சேதப்படுத்தி, அழித்து அல்லது திருடி இருந்தால், அதற்கான செலவை உங்களிடமிருந்து பெற பொருட்சொந்தக்காரர் முயற்சிக்கலாம். ஒரு நீதிமன்றம் உங்களுக்கு உத்தரவிட்டால் அன்றி நீங்கள் அதை செலுத்த வேண்டியதில்லை. பணம் செலுத்தும்படி உங்களைக் கேட்டும் ஏதாவது பத்திரங்களை நீங்கள் பெற்றால், ஒரு வழக்கறிஞரிடம் அல்லது சட்ட உதவி நிறுவனத்திடம் அதை உடனடியாக காட்டுங்கள்.

பொருட்சொந்தக்காரர் உங்களுக்கு எதிராக வழக்கொன்றைத் தொடுத்தால், அது பொருள் சம்பந்தமான நீதிமன்றத்திலேயே அன்றி குற்றவியல் நீதிமன்றத்திலாக இருக்காது. உங்களை காப்பாற்றிக் கொள்வதற்கு காலவரையறை இருக்கிறது. அதை மீறினால் பணத்தைச் செலுத்தும்படி நீதிமன்றம் உங்களுக்கு உத்தரவு இடலாம். ஆகையால் சட்ட உதவியை உடனடியாக பெறவும். ❢

**பொதுவான தகவல்களையே இந்தப் பக்கங்களில் நாம் தந்திருக்கிறோம். உங்களுடைய சொந்த நிலைமைக்கேற்ப சட்ட ஆலோசனையை நீங்கள் பெற வேண்டும்.**

## உதவி பெறுவது எப்படி

**உதவிதேடுதல் (Findhelp)** பலமொழிகளில் உதவிபுரியும் ஒரு சமூக முகவர் நிறுவனம். ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும், ஒரு வாரத்தில் 7 நாளும் அவர்கள் உங்கள் அழைப்பிற்கு பதில் அளிப்பார்கள். அவர்கள் உங்களுக்கு:

- எங்கு சட்ட உதவி பெறுவது, மற்றும்
- எப்படி வேறு வகையான உதவிகளுக்கு ஒரு குடியமர்வு ஆலோசகர் அல்லது குடியமர்வு சேவைகள் நிறுவனத்தை தொடர்பு கொள்வது,

பற்றிக் கூறுவார்கள்.

உதவிதேடுதலை தொடர்புகொள்ள:

☎ கட்டணமற்றது .................... **1-866-667-5366**

☎ கட்டணமற்றது செவிப்புலன் குறைந்தவர்களுக்கு ............. **1-888-340-1001**

**www.211ontario.ca**

**மேலதிக உதவிக்கு:**

10 அங்கத்துவ முகவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட CLEO (Community Legal Education Ontario/ Éducation juridique communautaire Ontario) ஆறு மொழி ஆலோசனை குழுவுடன் சேர்ந்து, CLEO ஆல் இது தயாரிக்கப்பட்டது.

ஒன்ராறியோ ரிறிலியம் ஸ்தாபனமும் (Ontario Trillium Foundation) மற்றும் ஒன்ராறியோ சட்ட உதவி நிறுவனமும் (Legal Aid Ontario) இந்த திட்டத்திற்கு நிதி உதவி அளித்துள்ளன.

இத்திட்டத்திற்கு தொலைபேசி அழைப்பு உதவி அளிப்பதற்காக உதவிதேடுதலுக்கு (Findhelp) CLEO நன்றி சொல்கிறது.

இந்தப்பக்கங்களையும் மற்றும் வேறு சட்ட விபரங்களை தகவலிறக்கம் செய்வதற்கு **www.cleo.on.ca** இணையதளத்தை சென்று பார்க்கவும்.